(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 53.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2016 பெப்புருவரி 24, புதன்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

83/ '15

1.

கௌரவ புத்திக பத்திரண,— புத்தசாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் வசிக்கின்ற தமிழ் பௌத்தர்கள் தொடர்பான தொகை மதிப்பொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில் மேற்படி தமிழ் பௌத்தர்களின் எண்ணிக்கை யாது;

(iii) வட மாகாணத்தில் வசிக்கின்ற தமிழ் பௌத்தர்களின் எண்ணிக்கை யாது;

(iv) மேலே குறிப்பிட்டவாறான தொகை மதிப்பொன்று நடத்தப்பட்டிராவிடின் அத்தகைய ஒன்றினை நடத்துவாரா;

(v) ஆமெனில், அத்திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் தமிழ் பிக்குமார்கள் உள்ளனரா;

(ii) ஆமெனில், அவர்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) யாழ்ப்பாணத்தில் தமிழ் பௌத்த மக்களுக்கு தமது சமய நடவடிக்கைகளில் ஈடுபடவும் அறநெறிக் கல்வியைப் பெறவும் அவசியமான வசதிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அது எவ்விதமாக;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

187/ '15

2.

கௌரவ டலஸ் அழகப்பெரும,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆம் திகதியன்று காலை அலரி மாளிகை வளாகத்தில் அரச விரோத சூழ்ச்சியொன்று இடம்பெற்றதாக தற்போதைய அரசாங்கத்தின் பொறுப்புவாய்ந்த அரசியல்வாதிகள் தெரிவித்திருந்தார்கள் என்பதையும்;

(ii) அவ்வாறானதொரு சூழ்ச்சி இடம்பெற்றதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் மற்றும் அரசாங்கத்தின் ஊடக பேச்சாளரான அமைச்சர், அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பின்போதும் பாராளுமன்ற சபா மண்டபத்திலும் தெரிவித்திருந்தார்கள் என்பதையும்;

(iii) மேற்படி சூழ்ச்சி தொடர்பாக கண்டறிவதற்கு இலங்கைப் பொலிசாரினால் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டதென்பதையும்;

(iv) ஏற்புடைய விசாரணைகள் மூலம் கண்டறியப்பட்ட விடயங்களுக்கமைய முன்னாள் சனாதிபதி அல்லது முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சனவரி மாதம் 09 ஆம் திகதியன்று எவ்விதமான அரச விரோத சூழ்ச்சியையும் மேற்கொள்ளவில்லை என்பது உறுதிப்படுத்தப் பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி அ (iii) இல் குறிப்பிடப்பட்ட பொலிஸ் விசாரணையின் பெறுபேறு யாதென்பதையும்;

(ii) மேற்படி விசாரணைக்கமைய குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு பொலிசாரினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) இன்றேல், ஏன் என்பதையும்;

(iv) மேற்படி விசாரணைக்கமைய, 2015 சனவரி 09 ஆம் திகதியன்று காலை அலரி மாளிகையில் எவ்விதமான அரச விரோத சூழ்ச்சியும் நடைபெறவில்லை என அறிவிப்பாரா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

189/ ' 15

3.

கௌரவ (டாக்டர் ) நளிந்த ஜயதிஸ்ஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கொழும்பு, கொம்பனித்தெருவில் அமைந்துள்ள பாதுகாப்புச் சேவைப் பாடசாலை சார்பில் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை கல்வி அமைச்சு வருடாந்தம் செலவிட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(ii) இப்பாடசாலை மாணவர்களிடமிருந்து பணம் சேகரிப்பதற்கு கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதா;

(iii) ஆமெனில், அத்தகைய அனுமதி வழங்கப்பட்ட கடிதத்தை சபையில் சமர்ப்பிப்பாரா;

(iv) மாணவர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட பணத்தை வைப்புச்செய்துள்ள வங்கிக்கணக்கு யாது;

(v) இங்கு பாடசாலை அபிவிருத்திச் சங்க கணக்கொன்று பேணப்பட்டு வருகின்றதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

205/ ' 15

4.

கௌரவ எம். எச். எம் சல்மான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மடவளை கடைவீதி, பங்களாகெதர, 21 ஆம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஏ.எம். சஹாப்தீன், க/மதீனா தேசிய பாடசாலையில் ஆரம்பப் பிரிவில் தொழிலாளராக 2006 ஆம் ஆண்டு தொடக்கம் பணிபுரிகின்றார் என்பதையும்;

(ii) இவரின் சேவை மற்றும் சேவைக்காலத்தை கவனத்திற்கொண்டு அமய அல்லது தற்காலிக அடிப்படையில் சேவையில் அமர்த்துவதற்காக உரிய ஆவணங்கள் அடிக்கடி மத்திய மாகாண கல்வித் திணைக்களத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட போதிலும், இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

(iii) இறுதியாக, 2014.11.18ஆம் திகதிய விண்ணப்பப்படிவம், அதிபர்/வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) திரு. சஹாப்தீனுக்கு அமய அல்லது தற்காலிக அடிப்படையில் தொழிலாளர் பதவியொன்றை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

226/ '15

5.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த அரசாங்கத்தின் கீழ் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் இடம்பெற்ற மோசடிகளையும் ஊழல்களையும் புலனாய்வு செய்வதற்காக விளையாட்டுத் துறை அமைச்சரால் திரு. ரவி அல்கமவின் தலைமையின் கீழ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில் அக்குழு உறுப்பினர்களின் பெயர்கள் யாவை;

(iii) அக்குழு நியமிக்கப்பட்ட திகதி யாது;

(iv) சம்பந்தப்பட்ட குழுவின் அறிக்கையைத் தயாரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு எவ்வளவு;

(v) அவ்வறிக்கை தயாரித்தல் நிறைவு செய்யப்பட்டுள்ளதா; ஆமெனில் அத்திகதி யாது;

(vi) மேற்படி அறிக்கையின் மூலம் இனங்காணப்பட்ட கடுமையான முறைகேடுகள் ஊழல் மற்றும் மோசடிகள் யாவை;

(vii) மேற்படி குழு அறிக்கையை சபையில் சமர்ப்பிப்பாரா;

(viii) சம்பந்தப்பட்ட குழு அறிக்கையில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டவர்கள் இருப்பின் அவர்களின் பெயர்கள் யாவை;

(ix) அவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒழுக்காற்று மற்றும் சட்ட நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

274/ '15

6.

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2014.01.01 ஆம் திகதி தொடக்கம் 2014.10.31 ஆம் திகதி வரை மற்றும் 2015.01.01 ஆம் திகதி தொடக்கம் 2015.10.31 ஆம் திகதி வரையான கால கட்டங்களில் அறிக்கையிடப்பட்ட,

(i) படுகொலைகள்;

(ii) கற்பழிப்புகள்;

(iii) ஆட்கடத்தல்கள்;

(iv) கப்பம் பெறல்கள்;

(v) கொள்ளைகள்;

எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

286/ '15

7.

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மழைக் காலங்களில் கொலொன்னாவை பிரதேசத்தில் பல துணை வீதிகள் நீரில் மூழ்குகின்றதென்பதையும், இதன் காரணமாக பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை ஸ்தம்பிதமடைகின்றதென்பதையும் அவர் அறிவாரா?

(ஆ) (i) கொலொன்னாவைத் தொகுதியில் அவ்வாறு நீரில் மூழ்குகின்ற துணை வீதிகள் மற்றும் பிரதேசங்கள் யாவையென்பதையும்;

(ii) அதற்கான தீர்வுகளை பெற்றுக்கொடுத்து மக்கள் வாழ்க்கையை மேம்படுத்துகின்ற வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி பிரதேசங்களின் கால்வாய்களை துப்புரவு செய்து, ஒழுங்காக நீர் வடிந்தோடுவதற்காக கால்வாய்களை அமைப்பதற்கான திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

310/ ’15

8.

கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனறாகல மாவட்டத்தின் வெல்லவாய தேர்தல் தொகுதியில் காணப்படுகின்ற காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) தற்போது அவ்வனைத்துக் காணிகளுக்குமான நிலஅளவை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) இன்றேல், நிலஅளவை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) வெல்லவாய தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளில் மக்களுக்கு மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள காணிகளின் அளவு யாதென்பதையும்;

(v) ஏற்கனவே சட்ட ரீதியான காணி உரிமையைக் கொண்டிராத ஆட்களுக்கு சட்ட ரீதியான காணியுரிமையைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

319/ ’15

9.

கௌரவ ஜயந்த சமரவீர,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.11.15 திகதியன்று உள்ளவாறு இலங்கையினுள் அரசுக்குச் சொந்தமான காணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி காணிகளில் குத்தகைக்கு வழங்கியுள்ள காணிகளின் அளவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரசுக்குச் சொந்தமான ஒவ்வொரு காணியின் பெயர் மற்றும் அளவு, பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மாவட்ட வாரியாக தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள ஒவ்வொரு காணியின் பெயர், அளவு மற்றும் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காலம், வருடாந்த குத்தகைகத் தொகை மற்றும் காணி அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மாவட்டம் தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) இன்றளவில் அரசுக்குச் சொந்தமான காணிகளை விற்பதற்கு அல்லது குத்தகைக்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) விற்பதற்கு அல்லது குத்தகைக்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ள காணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி காணிகள் விற்கப்படும் அல்லது குத்தகைக்கு வழங்கப்படும் நபர்கள் யாவர் என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

327/ ' 15

10.

கௌரவ பிமல் ரத்நாயக்க,— தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011, 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் ஊழியர் சேமலாப நிதியத்தில் பதிவு செய்துள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்தின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

329/ ' 15

11.

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1980 காலப்பகுதியில் கிண்ணியா பிரதேசத்தில் சுற்றுலா நீதிமன்றமொன்று இயங்கி வந்ததென்பதையும், பின்னர் பயங்கரவாத செயற்பாடுகள் காரணமாக அது மூடப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) பயங்கரவாத செயற்பாடுகள் காரணமாக மூடப்பட்ட குச்சவெளி சுற்றுலா நீதிமன்றம் கடந்த அரசாங்க காலத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டபோதிலும், அச்சந்தர்ப்பத்தில் கிண்ணியா சுற்றுலா நீதிமன்றத்தை மீண்டும் ஆரம்பிப்பது நிராகரிக்கப்பட்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் கிண்ணியா சுற்றுலா நீதிமன்றத்தை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

331/ ' 15

12.

கௌரவ ஹேஷா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2014 ஆம் ஆண்டு கல்வியியல் கல்லூரிகளுக்கு ஆங்கில ஆசிரியர் பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சையின் பொருட்டு;

(i) விண்ணப்பப்பத்திரம் கோரல் பிரகடனப்படுத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட இறுதித் திகதி யாதென்பதையும்;

(iii) பரீட்சை அனுமதி அட்டைகள் வெளியிடப்பட்ட திகதிகள் யாவையென்பதையும்;

(iv) குறிப்பிட்ட பரீட்சை நடாத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி பரீட்சைக்கான தகுதிகளைப் பூர்த்தி செய்திருந்த பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறவில்லையென்பதை அவர் அறிவாரா?

(இ) (i) பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை வழங்கும்போது தகைமைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டிருப்பின், அத்தகைமைகள் யாவையென்பதையும்;

(ii) தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் கிடைக்காதிருக்க முடியுமா என்பதையும்;

(iii) தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இரத்தினபுரி மாவட்டத்தின் முதுன்மங்கட, உடவலவயில் வசிக்கும் திருமதி. கே.வீ. அச்சலா செவ்வந்திக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி அட்டை கிடைக்கவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) உரிய அனுமதி அட்டை கிடைக்காததன் காரணமாக இவருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) இது தொடர்பாக இவர் மேன்முறையீடொன்றும் அடிப்படை உரிமை மீறல் பற்றிய முறைப்பாடொன்றும் சமர்ப்பித்திருந்தாலும், அதற்கான தீர்வு கிடைக்காதிருந்தமைக்கான காரணம் யாதென்பதையும்;

(vi) இவருக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி தொடர்பாக முறைசார்ந்த விசாரணையொன்றை மேற்கொண்டு நீதி நிறைவேற்றப்படுமா என்பதையும்;

(vii) குறித்த விசாரணையை ஆரம்பிப்பதற்கும் முடிவுறுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

337/ '15

13.

கௌரவ நாமல் ராஜபக்ஷ,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 சனாதிபதித் தேர்தலின் பின்னர் இலங்கை போக்குவரத்துச் சபையினுள் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல்களின் எண்ணிக்கை யாது ;

(ii) அரசியல் பழிவாங்கல்களை சீராக்கும் பொருட்டு, சேவையிலிருந்து நீக்கப்பட்ட குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள், அவர்கள் வகித்த பதவிகளில் மீள சேவையில் அமர்த்தப்பட்டுள்ளார்களா;

(iii) நிதி மோசடி, ஒழுக்கத்துக்கு முரணான செயல்கள் உள்ளிட்ட பாரதூரமான குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது, 2015 சனாபதித் தேர்தலின் பின்னர் அரசியல் விதப்புரைகளின் பிரகாரம் அவர்கள் மீண்டும் இலங்கை போக்குவரத்து சபையில் இணைக்கப்பட்டு அல்லது சேவையில் அமர்த்தப்பட்டுள்ளார்களா;

(iv) ஆமெனில், இவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா;

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

341/ ' 15

14\.

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தில் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ள மற்றும் மண்சரிவு ஏற்படக்கூடிய ஆபத்துள்ள தோட்டங்களில் வசிக்கின்ற குடும்பங்களை மீள குடியமர்த்துவதற்காக புதிய காணிகள் இனங்காணப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி காணிகள் அமைந்துள்ள பிரதேசங்கள் யாவையென்பதையும்;

(iii) மண்சரிவு காரணமாக இடம்பெயர்ந்துள்ள குடும்பங்கள் சம்பந்தமாக இது வரை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) மண்சரிவு ஆபத்து ஏற்பட்டுள்ள தோட்டங்களில் வசிக்கின்ற குடும்பங்கள் சம்பந்தமாக இது வரை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

85/ '15

15\.

கௌரவ புத்திக பத்திறண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கொழும்பு, லும்பிணி வித்தியாலயத்தின் லும்பிணி அரங்கு பழுதடைந்து உள்ளது என்பதையும்;

(ii) அதைத் திருத்தியமைப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதையும்;

(iii) மேற்படி அரங்கு பழுதடைந்து காணப்படுவது குறித்த பாடசாலைக்கும் அதேபோன்று கலைத்துறைக்கும் பாரிய இழப்பாக அமைந்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) லும்பிணி அரங்கு திறந்து வைக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அன்று தொடக்கம் இன்று வரை அது எத்தனை தடவைகள் மறுசீரமைக்கப்பட்டது என்பதையும்;

(iii) மேற்படி அரங்கு இறுதியாக மறுசீரமைக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) லும்பிணி அரங்கினை மறுசீரமைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கென செலவிடும் தொகை யாதென்பதையும்;

(iii) குறித்த மறுசீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

கௌரவ நாமல் ராஜபக்ஷ,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"கஹவில்கொட ஜாதிக உறும உயன எண்ணக்கரு நூதனசாலை அபிவிருத்தி நிதியத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

2.

கௌரவ நாமல் ராஜபக்ஷ,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"த பேரண்ட்ஸ் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

அரசியலமைப்புச் சபையை நியமிப்பதற்கான தீர்மானம்,— ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 சனவரி 09),— "இலங்கைக்கு புதிய அரசியலமைப்பொன்றை வகுத்தல் அவசியமென இலங்கை மக்கள் மத்தியில் பரந்தளவில் இணக்கப்பாடு காணப்படுவதாலும்;

2015, சனவரி 08 ஆம் திகதி நடைபெற்ற சனாதிபதி தேர்தலின் போது மக்கள் சட்ட ஒழுங்குக்கு மதிப்பளித்து சனநாயகத்தை வலுப்படுத்தும் அரசியல் கலாசாரமொன்றை தாபிப்பதற்கு தெளிவான மக்கள் ஆணை மக்களால் வழங்கப்பட்டுள்ளதாலும்;

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் சனாதிபதி அதிமேதகு மைத்திரிபால சிறிசேன, புதிய அரசியலமைப்பை சட்டவாக்கம் செய்து, மற்றும் பலவற்றுடன் நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதி முறைமையை ஒழிப்பதன் மூலம் மேற்கூறப்பட்ட சனாதிபதித் தேர்தலின் போது வெளிப்படுத்தப்பட்ட மக்களின் விருப்புக்கு வலுவூட்டுவதற்கான தனது அபிலாசையினைத் தெளிவாகக் கூறியுள்ளதாலும்;

மேலும் பல்வேறு விடயங்களுடன் நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதி முறைமையை ஒழித்து, விருப்பு வாக்கு முறைமையை நீக்கி நியாயமான பிரதிநிதித்துவ தேர்தல் முறைமையை உறுதிப்படுத்தி, அனைத்து பிரஜைகளினதும் சனநாயக உரிமைகளை பலப்படுத்தி, தேசிய பிரச்சினைக்கு அரசியலமைப்பு ரீதியான தீர்வொன்றை வழங்கக் கூடிய, தேசிய நல்லிணக்கத்தை மேம்படுத்தி சட்ட விதியை மதிக்கும் அரசியல் கலாசாரமொன்றை தாபிக்கக் கூடிய, மனித கௌரவத்தை உறுதிப்படுத்தும் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும் சுயாதீனத்தன்மைக்கும் உத்தரவாதம் அளித்து பொறுப்புமிக்கதும் வகைகூறக் கூடியமதுமான அரசாங்கமொன்றை மேம்படுத்தும் புதிய அரசியலமைப்பொன்றை சட்டவாக்கம் செய்தல் அவசியமாகின்றதனாலும்;

1. இலங்கையின் புதிய அரசியலமைப்பு பற்றிய மக்களின் கருத்துகளையும் ஆலோசனைகளையும் பெற்று அவற்றைப் பற்றிக் கலந்தாராய்ந்து அரசியலமைப்பின் 75ஆவது உறுப்புரையின் கீழ் பாராளுமன்றத்தின் தத்துவங்களைப் பிரயோகிப்பதில் அதன் பரிசீலனைக்காக அரசியலமைப்பு சட்டமூலத்தின் வரைவைத் தயாரிக்கும் நோக்கத்துக்காக இதனகத்து இதன் பின்னர் 'அரசியலமைப்புச் சபை' என அழைக்கப்படும் எல்லா பாராளுமன்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கிய பாராளுமன்றக் குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. பாராளுமன்றத்தின் கௌரவ சபாநாயகர் அரசியலமைப்பு சபையின் தவிசாளராக இருப்பார். அரசியலமைப்பு சபை ஏழு (7) பிரதித் தவிசாளர்களைக் கொண்டதாக இருக்கும் என்பதுடன் அவர்கள் அரசியலமைப்பு சபையினால் தெரிவுசெய்யப் படுதலும் வேண்டும்.

கௌரவ சபாநாயகர் இல்லாத சந்தர்ப்பங்களில், சபைக்கூட்டங்களின் அமர்வுக்குத் தலைமை வகிப்பதற்கு அரசியலமைப்பு சபையின் பிரதித் தவிசாளர்களுக்கிடையே ஒருவரைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

3. அரசியலமைப்பு சபையின் கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண் இருபது (20) ஆக இருத்தல் வேண்டும்.

4. (அ) அரசியலமைப்பு சபைக்கான அரசியலமைப்பு சார்ந்த ஆலோசகர்களையும்;

(ஆ) அரசியலமைப்பு சபைக்கான ஒரு சட்டத்துறைசார் செயலாளரையும் அத்தகைய சட்டத்துறைசார் செயலாளரின் உதவியாளர்களையும்;

(இ) அரசியலமைப்பு சபையினதும் வாசகம் 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள குழுக்களினதும் நடவடிக்கைகளைப் பதிவு செய்யும் நோக்கத்துக்காக அரசியலமைப்பு சபையின் பணியாளர்களையும்; மற்றும்

(ஈ) அரசியலமைப்பு சபையின் (சமூக ஊடகங்களை உள்ளடக்கிய) ஊடக பணியாளர்களையும் அரசியலமைப்பு சபை கொண்டிருத்தல் வேண்டும்.

ஊடகப் பணியாளர்கள் இணையத்தளம் ஒன்றை நிறுவிப் பேணுவதுடன் இலங்கையின் புதிய அரசியலமைப்பை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை முறைக்கு தகுந்த விளம்பரம் வழங்குவதற்குப் பொருத்தமான ஏனைய ஊடகங்களைப் பயன்படுத்துதலும் வேண்டும்.

அரசியலமைப்புச் சபையினதும் அதன் குழுக்களினதும் நடவடிக்கைகளும் அவ்வாறே, பொதுமக்களின் கருத்துக்களும் / சமர்ப்பிப்புகளும் ஆவணப்படுத்தப் படுவதையும் அத்தகைய வேறு தொடர்பான நிபுணத்துவ அல்லது தொழில்நுட்ப அபிப்பிராயங்களுடன் அத்தகைய இணையத்தளங்களில் பிரசுரிக்கப்படுவதையும் ஊடகப் பணியாளர்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

5. அரசியலமைப்பு சபை பின்வரும் உப குழுக்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:

(அ) பிரதம அமைச்சர் (தவிசாளர்), பாராளுமன்றச் சபை முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர், நீதி அமைச்சர், மற்றும் அரசியலமைப்பு சபையினால் நியமிக்கப்படுகின்ற அரசியலமைப்பு சபையின் ஏனைய உறுப்பினர்கள் பதினேழு (17) பேரை விஞ்சாத எண்ணிக்கையைக் கொண்டதொரு வழிப்படுத்தும் குழு.

வழிப்படுத்தும் குழு அரசியலமைப்பு சபையின் அலுவல்கள் மற்றும் இலங்கையின் புதிய அரசியலமைப்பை வரையும் பணி ஆகியவற்றுக்கான பொறுப்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) அரசியலமைப்பு சபையினால் நியமிக்கப்படக்கூடிய அரசியலமைப்பு சபையின் உறுப்பினர்களைக் கொண்ட அத்தகைய ஏனைய உபகுழுக்கள்.

ஆயின், ஒவ்வொரு உப குழுவும் பதினொரு (11) பேரை விஞ்சாதவாறு உறுப்பினர்கள் இருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு உப குழுவினதும் தவிசாளர் வழிப்படுத்தும் குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

6. அரசியலமைப்பு சபை அதன் முதலாவது அமர்வின்போது:—

(அ) பிரதித் தவிசாளர்களைத் தெரிவுசெய்தலும்;

(ஆ) வாசகம் 5 (ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ள உப குழுக்களைத் தீர்மானித்தலும்; அத்துடன்

(இ) வாசகம் (5) இல் குறிப்பிடப்பட்டுள்ள உப குழுக்களின் உறுப்பினர்களைத் தெரிவுசெய்தலும் வேண்டும்.

7. அமைச்சரவைக்கும் பாராளுமன்றத்துக்கும் சமர்ப்பிப்பதற்கு முன்னர், அரசியலமைப்பு சபையின் பரிசீலனைக்காக அரசியலமைப்பின் வரைவொன்றை பிரேரிக்கும் தீர்மானத்தை சமர்ப்பிக்குமாறு வழிப்படுத்தும் குழுவைக் கோரும் அரசியலமைப்பு சபை மேற்கொள்ளவேண்டிய தீர்மானத்தை பிரதம அமைச்சர் அரசியலமைப்பு சபையின் முதலாவது கூட்டத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. அரசியலமைப்பு சபை அதன் அமர்வுகளை பாராளுமன்றச் சபையில் நடாத்துவதற்கு இத்தால் அதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றது:

ஆயினும், மேல் மாகாணத்திற்கு வெளியே ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட இடத்தில் அதன் கூட்டங்களை நடத்துவதற்கு அரசியலமைப்பு சபை தீர்மானிக்கலாம்:

ஆயின், மேலும் பத்திரங்களைச் சமர்ப்பித்தல், தீர்மானங்களைப் பிரேரித்தல் மற்றும் வாக்களிப்பு ஆகியவை பாராளுமன்றச் சபையிலேயே இடம்பெறுதல் வேண்டும்.

9. அரசியலமைப்பு சபையின் அல்லது ஏதேனும் அதன் குழுவின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான சேவைகளுக்காக எந்தவொரு நிறுவனத்தின் சேவைகளையும் வழிப்படுத்தும் குழு கோரலாம்.

10. அரசியலமைப்புச் சபைக்கு அத்துடன் / அல்லது அதன் பல்வேறு உபகுழுக்களுக்கு உதவுவதற்கும் ஆலோசனை வழங்குவதற்கும் ஏனைய நிபுணர்களை வழிப்படுத்தும் குழு நியமிக்கலாம்.

11. அரசியலமைப்பு சபையின் நடவடிக்கைகள் பொதுமக்களுக்கு திறந்ததாக இருத்தல் வேண்டும். அரசியலமைப்பு சபையினதும் அதன் உப குழுக்களினதும் நடவடிக்கைகள் ஆவணப்படுத்தப்பட்டு உடனடியாக வெளியிடப்படுதலும் வேண்டும். பொருத்தமானவிடத்து, அரசியலமைப்பு சபையின் அத்துடன்/ அல்லது அதன் உப குழுக்களின் நடவடிக்கைகளை ஒலிபரப்பு/ஒளிபரப்பு செய்வதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசியலமைப்புச் சபை மேற்கொள்ளுதல் வேண்டும்.

சந்தேகங்களை நீக்குவதற்காக, மேலே சொல்லப்பட்ட விடயங்களை வெளியிடுவதற்கு பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் பிரிவு 17இன் பிரகாரம் பாராளுமன்றத்தின் விசேட அனுமதி குறிப்பாக வழங்கப்படுதல் வேண்டும் என இத்தால் குறிப்பாகத் தீர்மானிக்கப்படுகின்றது.

சந்தேகங்களை நீக்குவதற்காக, அரசியலமைப்பு சபையினதும் வாசகம் 5இல் குறிப்பிடப்பட்டுள்ள உப குழுக்களின் நடவடிக்கைகள் ஏக காலத்தில் பாராளுமன்றத்துக்கு அறிக்கை செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுவதுடன் இத்தால் குறிப்பாக அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் அத்தகைய நடவடிக்கைகளின் வெளியீடு பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் பிரகாரம் தவறொன்றாக அமையாது எனவும் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

12. கலந்தாலோசிப்பதற்காக அத்துடன் / அல்லது விடயங்களை முன்வைப்பதற்காக எந்தவொரு ஆளையும் அரசியலமைப்பு சபையின் முன் வரவழைப்பதற்கான தத்துவத்தை அரசியலமைப்பு சபை கொண்டுள்ளது.

13. கலந்தாலோசிப்பதற்காக அத்துடன் / அல்லது விடயங்களை முன்வைப்பதற்காக அத்துடன் / அல்லது பொதுமக்கள் பிரதிநிதித்துவக் குழுவின் முடிவுகளை அறிக்கை செய்வதற்காக பொதுமக்கள் பிரதிநிதித்துவக் குழுவின் எவரேனும் உறுப்பினரை வரவழைப்பதற்கான தத்துவத்தையும் அரசியலமைப்பு சபை கொண்டுள்ளது.

14. இது தொடர்பான ஏற்பாடுகளுக்கு அமைவாக, அரசியலமைப்பு சபையின் அலுவல்களை நடத்துவதில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளையும் உபாயங்களையும் தீர்மானிப்பதற்கு அதற்கு இத்தால் அதிகாரம் அளிக்கப்படுகின்றது:

ஆயின், வழிப்படுத்தும் குழுவின் உடன்பாட்டுடன் பிரதம அமைச்சரால் பிரேரிக்கப்படும் தீர்மானத்தைப் பின்பற்றி அத்தகைய தீர்மானம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்:

பாராளுமன்ற நிலையியல் கட்டளைகளில் இதற்கு முரணாக எவ்வாறிருப்பினும், அரசியலமைப்பு சபையினதும் அதன் உப குழுக்களினதும் நடவடிக்கைமுறை விதிகள் இந்தத் தீர்மானத்தில் காட்டப்பட்டுள்ளவாறு அமைதல் வேண்டும்.

15. அரசியலமைப்பு சபையின் அலுவல்கள் பற்றிய அறிவித்தல் பிரதம அமைச்சரினால் அல்லது அது பற்றிய வழிப்படுத்தும் குழுவின் அங்கீகாரத்துடன், பிரதம அமைச்சரினால் அத்தகைய நோக்கத்துக்காக காலத்துக்குக் காலம் நியமிக்கப்படும் அமைச்சரவையின் அத்தகைய அமைச்சரினால் வழங்கப்படுதல் வேண்டும்.

16. வாசகம் 5(ஆ)வில் குறிப்பிடப்பட்டுள்ள உப குழுக்கள் அத்தகைய ஒவ்வொரு உப குழுவும் நியமிக்கப்பட்டு பத்து (10) வாரங்களினுள் வழிப்படுத்தும் குழுவுக்கு தங்கள் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

17. வாசகம் 5(ஆ)வின் கீழ் நியமிக்கப்பட்ட உப குழுக்களின் அறிக்கைகளையும் பொதுமக்கள் பிதிநிதித்துவக் குழுவின் அறிக்கையையும் பரிசீலித்ததன் மீதாக, வழிப்படுத்தும் குழு அரசியலமைப்பு சபைக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அறிக்கை அரசியலமைப்புச் சட்டத்தின் வரைவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

18. அரசியலமைப்பு சபை அதன் பின்னர் அறிக்கையினதும் அரசியலமைப்பு வரைவினதும் (ஏற்புடையதாயின்) பொதுவான அனுகூலங்கள் மற்றும் கோட்பாடுகள் பற்றி விவாதிப்பதுடன் உத்தேச திருத்தங்கள் பற்றியும் விவாதிக்கலாம். அத்தகைய விவாதத்தின் இறுதியில், “இறுதி அறிக்கை ஒன்றையும் அரசியலமைப்பு வரைவு பற்றிய தீர்மானத்தையும் சமர்ப்பிக்குமாறு வழிப்படுத்தும் குழு கோரப்படுமாக” என்னும் வினா அக்கிராசனத்தினால் அரசியலமைப்புச் சபைக்கு விடப்படும்.

19. அதன் பின்னர், வழிப்படுத்தும் குழு, விவாதத்தின்போது முன்மொழியப்பட்ட திருத்தங்களை, ஏதேனும் இருப்பின், பரிசீலித்து அரசியலமைப்பு சபையின் பரிசீலனைக்கு இறுதி அறிக்கை ஒன்றையும் அரசியலமைப்பு வரைவை உள்ளடக்கிய தீர்மானத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய இறுதி அறிக்கையும் அரசியலமைப்பு வரைவை உள்ளடக்கிய தீர்மானமும் அரசியலமைப்பு சபையினால் அங்கீகரிக்கப்படுமாக என பிரதம அமைச்சர் பிரேரித்தல் வேண்டும்.

20. 18 ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவாதத்தின் போது பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்படுதல் வேண்டும்:—

தவிசாளரால் அல்லது தவிசாளர் வருகை தந்திராத சந்தர்ப்பத்தில் எவரேனும் பிரதித் தவிசாளரால் ஒவ்வொரு வாசகத்தினதும் இலக்கம் வரிசைக் கிரமப்படி வாசிக்கப்படல் வேண்டும்.

(i) வாசகமொன்றுக்கு ஏதேனும் திருத்தத்தை மேற்கொள்ளலாம் அல்லது வாசகங்கள் நீக்கப்படலாம் அல்லது புதிய வாசகங்கள் சேர்க்கப்படலாம்.

(ii) விவாதத்தின் இந்தக் கட்டத்தின் போது அரசியலமைப்பு வரைவின் விபரங்கள் அன்றி அதன் கோட்பாடுகள் பற்றி கலந்துரையாடலாகாது.

(iii) அரசியலமைப்பு வரைவின் ஏதேனும் முன்னைய பகுதிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு ஏற்புடையதல்லாத திருத்தங்களைப் பிரேரிக்க முடியாது.

(iv) அரசியலமைப்பு வரைவின் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னரும் வரைவு தொடர்பான விவாதம் நிறைவு செய்யப்படுவதற்கு முன்னரும் எவரேனுமொரு உறுப்பினர் தவிசாளரின் அனுமதியின் பேரில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட வாசகத்துக்கு திருத்தமொன்றைப் பிரேரிக்கலாம்.

(v) வாசகம் ஒன்றுக்கான திருத்தம் பற்றிய வினா முழுமையாக அக்கிராசனத்தினால் பிரேரிக்கப்படாதவிடத்து, வாசகமொன்று பிற்போடப்படலாம்.

(vi) அரசியலமைப்பு வரைவின் மீதி வாசகங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் பின்னரும் புதிய வாசகங்கள் கொண்டு வரப்படுவதற்கு முன்னரும் பிற்போடப்பட்ட வாசகங்கள் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்.

(vii) அரசியலமைப்பு வரைவின் அட்டவணைகளை பரிசீலனை செய்யப்படுவதற்கு முன்னர் புதிய வாசகங்களைச் சமர்ப்பிக்கலாம் என்பதோடு அதனை முதலாவது மதிப்பீடாக கருதுதல் வேண்டும். இதன் தொடரும் வினாக்கள் ''வாசகம் இரண்டாம் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும்'' மற்றும் ''வாசகம் (அல்லது திருத்தப்பட்டதற்கு அமைவான வாசகம்) அரசியலமைப்பு வரைவில் சேர்க்கப்படும்'' என்பனவாகும்.

(viii) அரசியலமைப்பு வரைவின் அட்டவணைகள் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் புதிய அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படலாம் என்பதுடன் இவை புதிய வாசகங்களாகவே கருதப்படல் வேண்டும்.

(ix) எல்லா வாசகங்களும் அட்டவணைகளும் அத்துடன் பிரேரிக்கப்பட்ட புதிய வாசகம் அல்லது அட்டவணைகள் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், முகவுரை, ஏதேனும் ஒன்று இருப்பின், அது பரிசீலிக்கப்பட்டு 'இது அரசியலமைப்பு வரைவின் முகவுரையாக இருக்குமாக' என்ற வினாவை விடுத்தல் வேண்டும்.

(x) அரசியலமைப்பு வரைவின் பெயரில் ஏதேனும் திருத்தங்கள் அவசியப்படின் மேலே விபரிக்கப்பட்ட நடைமுறைகளின் இறுதியில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

21. பாராளுமன்றத்தின் நிலையியல் கட்டளைகள் 42, 43 மற்றும் 44இன் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் அரசியலமைப்புச் சபையின் நடைமுறைகளில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

22. அரசியலமைப்புச் சபையின் மூன்றில் இரண்டு பங்கினர் அரசியலமைப்பு வரைவு தொடர்பான தீர்மானத்தை அங்கீகரிக்காதவிடத்து இந்த தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியலமைப்புச் சபையும் குழுக்களும் கலைக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

23. அரசியலமைப்புச் சபை அரசியலமைப்பு வரைவு பற்றிய தீர்மானத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மையினால் அங்கீகரிக்குமிடத்து அறிக்கையும் மற்றும் அரசியலமைப்பு வரைவும் வழிப்படுத்தும் குழுவினால் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் இந்த தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியலமைப்பு சபையும் உப குழுக்களும் கலைக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

24. அத்தகைய அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள சட்டமூலத்தை அரசியலமைப்பின் 75(ஆ) மற்றும் 120(ஆ) ஆகிய உறுப்புரைகளின் பிரகாரம் அரசியலமைப்பை முற்றுமுழுதாக நீக்கி பதிலீடு செய்வதற்கான சட்டமூலமாக அமைச்சரவை சான்றுபடுத்துவதோடு அத்தகைய சட்டமூலம் அரசியலமைப்பின் 83ஆம் உறுப்புரையில் தேவைப்படுத்தப்படும் விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதற்கு கருதப்பட்டு மக்கள் தீர்ப்புக்காக மக்களிடம் சமர்ப்பிக்கப்படும்.

25. இதனை அடுத்து அரசியலமைப்பின் உறுப்புரை 78(1) இன் பிரகாரம் சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும்.

26. அதன் பின்னர், சனாதிபதி அரசியலமைப்பின் உறுப்புரை 154எ(2)இன் பிரகாரம் சட்டமூலத்தை ஒவ்வொரு மாகாண சபைகளின் கருத்துகளையும் பெற்றுக் கொள்வதற்காக அத்தகைய அனைத்து சபைகளுக்கும் ஆற்றுப்படுத்தல் வேண்டும்.

27. இதன் பின்னர் பிரதம அமைச்சர் அத்தகைய சட்டமூலத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதுடன் அத்தகைய சட்டமூலம் பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

28. மேல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அத்தகைய சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததன் பின்னர் அரசியலமைப்பின் 83ஆவது உறுப்புரையின் பிரகாரம் விசேட பெரும்பான்மையினால் சட்டமூலம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படுமாக என பிரதம அமைச்சர் பிரேரிக்க வேண்டும்.

மொத்த பாராளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டிற்குக் குறையாத உறுப்பினர்கள் கூறப்பட்ட சட்டமூலத்துக்குச் சார்பாக வாக்களிக்குமிடத்து, சட்டமூலம் விசேட பெரும்பான்மையினால் பாராளுமன்றத்தினால் உரியவாறு நிறைவேற்றப்பட்டுள்ளது என சபாநாயகர் அரசியலமைப்பின் 79ஆவது உறுப்புரைக்கு அமைய தகுந்தவாறு சான்றுப்படுத்துவதுடன் இலங்கையின் இறைமை உரித்தாக்கப்பட்டுள்ள மக்களினால் மக்கள் தீர்ப்பொன்றின் மூலம் அங்கீகரிக்கப்படும் வரை, சட்டமூலம் சட்டமாகாது.

29. இதன் பின்னர் அரசியலமைப்பின் 85(1)ஆம் உறுப்புரையின் பிரகாரம் மக்கள் தீர்ப்பொன்றின் மூலம் மக்களால் அங்கீகரிப்பதற்காக சனாதிபதியினால் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

30. சட்டமூலம் மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்படுமிடத்து, அரசியலமைப்பின் 80(2)ஆம் உறுப்புரையின் பிரகாரம் சனாதிபதியினால் சட்டமூலம் சான்றுப்படுத்தப்பட்டதன் பின் சட்டமூலம் சட்டமாக மாறும்.

31. அரசியலமைப்புச் சபை மற்றும், 5ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உப குழுக்கள் மற்றும் இந்த தீர்மானத்துக்கு அமைவாக நியமிக்கப்பட்டுள்ள பணியாளர் மற்றும் ஆலோசகர்களுக்கான செலவினங்கள் திரட்டு நிதியத்தில் இருந்து மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன் அரசியலமைப்பின் 150ஆவது உறுப்புரையின் பிரகாரம் அவ்விடயம் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகளைப் பாராளுமன்றம் மேற்கொள்ளுதல் வேண்டும்.

32. சந்தேகங்களைத் தவிர்ப்பதற்காக, அரசியலமைப்புச் சபையினால் பிரேரிக்கப்பட்டவாறு இவ்வாறான அரசியலமைப்புச் சட்டமூலத்தை ஏற்றுக்கொள்ளுதல் அல்லது நிராகரித்தல் அல்லது திருத்தத்துக்கு அமைவாக ஏற்றுக்கொள்ளுதல் பாராளுமன்றத்தின் பொறுப்பாக இருக்க வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

33. சந்தேகங்களைத் தவிர்ப்பதற்காக, சமுகமளிக்காத உறுப்பினர்கள் உட்பட பாராளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு விசேட பெரும்பான்மையினால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, பின்னர் அரசியலமைப்பின் 83ஆவது உறுப்புரையில் தேவைப்படுத்தப்பட்டவாறு மக்கள் தீர்ப்பொன்றின் போது மக்களினால் அங்கீகரிக்கப்படுமிடத்து மாத்திரம் அரசியலமைப்பு சட்டமூலம் சட்டமாக்கப்படுதல் வேண்டுமென இத்தால் மேலும் தெரிவிக்கப்படுகின்றது."எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 2.

வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 3.

வேலையாளர்களின் வரவுசெலவுத் திட்ட நிவாரணப்படி சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

நுண்நிதியளிப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 6.

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— குற்றவியல் விடயங்களின் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க குற்றவியல் விடயங்களின் போது பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 ஓகத்து மாதம் 06 ஆம் திகதிய 1926/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

விளையாட்டுத்துறை அமைச்சர்,— தேசிய அரசுப் பேரவையின் விளையாட்டுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் 31 ஆம் மற்றும் 41 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் கீழ் விளையாட்டுத்துறை அமைச்சினால் ஆக்கப்பட்டு, 2013 சனவரி மாதம் 15 ஆம் திகதிய, 1793/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்கத்தின் ஒழுங்கிதகள் கொண்ட 13 மற்றும் 17 ஆம் பிரிவுகள் திருத்தப்பட்டு 2015 நவம்பர் மாதம் 09 ஆம் திகதிய 1940/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.01.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழ், உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 நவெம்பர் 20 ஆந் திகதிய 1941/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.02.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 2011 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 03 (இ) ஆம் பிரிவின் கீழ், உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 நவெம்பர் 20 ஆந் திகதிய 1941/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.02.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழ், உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2016 சனவரி 12 ஆந் திகதிய 1949/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.02.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறு மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் ( அத்தியாயம் 52) 22 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ், மதுவரி தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 நவெம்பர் 20 ஆம் திகதிய 1941/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.02.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 978, 979, 980)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 12.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறு மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் ( அத்தியாயம் 52 ) 22 ஆம் பிரிவின் ( 1 ) ஆம் உப பிரிவின் கீழ், மதுவரி தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 திசெம்பர் 04 ஆம் திகதிய 1943/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.02.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 981)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 13.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— காலத்துக்குக் காலம் திருத்தப்பட்ட செய்யப்பட்டவாறு மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 52 ) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 25 ஆம் பிரிவின் கீழ், மதுபானங்களின் செறிவின் அளவு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 திசெம்பர் 15 ஆம் திகதிய 1945/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.02.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 982)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 14.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.4),— காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறு மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 52) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 25 ஆம் பிரிவின் கீழ், வருடாந்த உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 திசெம்பர் 15 ஆம் திகதிய 1945/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.02.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 983, 984)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 15.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.5),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் ( அத்தியாயம் 52) 4 ஆம் மற்றும் 13 ஆம் பிரிவுகளின் கீழ், வெளிநாட்டு மதுபானம் விநியோகம் மற்றும் இடப்பெயர்வு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 திசெம்பர் 31 ஆம் திகதிய 1947/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.02.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 985)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 16.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.6),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 52) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 25 ஆம் பிரிவின் கீழ், ஹோட்டல்களில் மதுசாரப் பாவனையுடன் தொடர்புபட்ட கட்டணம் தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 திசெம்பர் 31 ஆம் திகதிய 1947/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.02.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 986)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 17.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.7),— காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறு மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 52) 22 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ், மதுவரி தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 திசெம்பர் 31 ஆம் திகதிய 1947/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.02.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 987)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 18.

நிதி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அச்சட்டத்தின் 26 ஆவது பிரிவின் கீழ் சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர்கள் அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2015 திசெம்பர் 14 ஆம் திகதிய 1945/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.02.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 19.

நிதி அமைச்சர்,— முத்திரைக் கட்டணம் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டணம் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் முத்திரைக் கட்டணம் தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2016 சனவரி 01 ஆம் திகதிய 1947/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.02.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 20.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரினால், செஸ் வரி தொடர்பில் விதிக்கப்பட்ட 2015 ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆம் திகதிய 1941/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.02.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 21.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரினால், செஸ் வரி தொடர்பில் விதிக்கப்பட்ட 2015 ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆம் திகதிய 1941/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.02.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 22.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரினால், செஸ் வரி தொடர்பில் விதிக்கப்பட்ட 2015 ஆண்டு திசெம்பர் மாதம் 11 ஆம் திகதிய 1944/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.02.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 23.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 24.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 பெப்புருவரி 26 ஆம் திகதிய 1903/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 25.

நிதி அமைச்சர்,— முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான முத்திரைக் கட்டணம் தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2014 செத்தெம்பர் 30 ஆம் திகதிய, 1882/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 26.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 28(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 16(இ) ஆம் பிரிவின் கீழ் மதுவரி உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு 2015 பெப்புருவரி மாதம் 13 ஆம் திகதிய 1901/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(973 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.